2

## சிறப்பு குறிப்பு 02
## தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கான அண்மைக்கால வங்கித்தொழில் துறை சீர்திருத்தங்கள்

### 1. பின்னணி

வங்கிகள் நிதியியல் முறைமையின் முக்கிய அம்சமாக காணப்படுவதுடன், பிரதான நிதியியல் இடையேற்பாட்டாளராக பொருளாதார வளர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்தி என்பனவற்றை தூண்டுவதில் பிரதான வகிபாகத்துடன் தொழிற்படுகின்றன. இலங்கையில் வங்கித்தொழில்துறை 2024இன் இறுதியில் ரூ.22 ரில்லியனுக்கு மேற்பட்ட சொத்துதளத்துடன்கூடிய 30 உரிமம்பெற்ற வங்கிகளை உள்ளடக்கியிருக்கிறது. மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி பேரண்டப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளுக்கு மேலதிகமாக, நிதியியல் துறை சீர்திருத்தங்களின் தொடரொன்றினை நடைமுறைக்கிட்டது. இத்தந்திரோபாயங்கள் சாத்தியமான நெருக்கடிகளைத் தடுப்பதையும் வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதனையும் பரவுகின்ற இடர்நேர்வுகள் மற்றும் கசிவுத் தாக்கங்கள் போன்றவை பரந்த பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றை தவிர்ப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதற்கமைய, மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் வங்கித்துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் இருந்தது.

### 2. 2022 இலிருந்து இன்றுவரை இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள்

**நெருக்கடிக்கு தயாராகின்ற வழிமுறைகள்**

முக்கியமான நெருக்கடியொன்றுக்கு தயாராகின்ற வழிமுறையொன்றாக, ஏற்கனவேயுள்ள தற்காலிக திரவத்தன்மை இடர்பாடுகளுடன் கூடிய வங்கிகளுக்கு அவசரகால கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவது மீதான கட்டமைப்பு, நிதியியல் முறை உறுதித்தன்மை மீதான மோசமான நடைமுறைப்படுத்தலை தடுக்கும் பொருட்டு வலுப்படுத்தப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானித்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் அவசரமுன்னுரிமையொன்றாக நிதியியல் துறையின் பாதுகாப்பு வலையமைப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதனையும் அடையாளம் கண்டது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி, வங்கிகளுக்கான தீர்மானித்தல் வழிமுறைகளையும் வைப்பாளர்களினதும் மற்றைய ஆர்வலர்களினதும் நல உரித்துக்களை பாதுகாப்பதனையும் முக்கிய கவனத்திற்கொண்டு 2023ஆம் ஆண்டின் 17ம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினை உருவாக்கியது. மேலும், நிதியியல் துறையின் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தும் நோக்கத்துடன், நிதியியல் உறுதிப்பாட்டு நிதியினை உருவாக்குவதற்கும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் இயலுமை மற்றும் நிறுவன ரீதியான



2

ஒழுங்கமைப்புக்களை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிகமாக, நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடையேயான கொள்கை இணைப்புக்களை வலுப்படுத்துகின்ற நோக்குடன் நெருக்கடிக்கு ஆயத்தமாக இருத்தல் மற்றும் நிதியியல் நெருக்கடிகளின் தாக்கத்தினைக் குறைப்பது என்பன மீது கவனம் செலுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சுக்குமிடையிலான கொள்கை இணைப்பினை உறுதிப்படுத்துவதற்காக வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) திட்டத்தின் கீழ் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டது.

**வங்கித் தொழில் (திருத்தம்) சட்ட உருவாக்கம்**

பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையினைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி, வங்கித் தொழில் துறையின் தாக்குப் பிடிக்கும் தன்மையினை பேணுவதற்காக தீவிரப்படுத்தப்பட்ட மேற்பார்வையூடாக ஒழுங்குவிதிகளை விடுத்தல் மற்றும் மேற்பார்வை அணுகுமுறையினை வலுப்படுத்தல் என்பன உள்ளிட்ட, பல கொள்கை வழிமுறைகளை நடைமுறைக்கிட்டது. வங்கித்தொழில் துறையினை வலுப்படுத்துவதற்காக 2024இல் எடுக்கப்பட்ட மிக இன்றியமையாத நடவடிக்கையாக 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் விளங்குகிறது. 2024 யூன் 15ஆம் திகதி நடைமுறைக்குவந்த இச்சட்டம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைத்தான சட்ட கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் முக்கியமான மைல்கல்லொன்றினை குறித்துநிற்கிறது. புதிய சட்டமானது உரிமம்பெறும் தேவைப்பாடுகள், இறுதி பயன்பெறுநர் சொத்துடமை உட்பட பங்குடமையாளர் பொருத்தத் தன்மைக்கான பிரமாணம், கம்பனி ஆளுகைத் தேவைப்பாடுகள், வங்கிச் சொத்துடமை, கையேற்பு, இணைப்புக்கள் மற்றும் கூட்டிணைத்தல், விகிதாசாரத் தன்மை, பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம், வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனப்படுத்தல், கணக்குகள் மற்றும் கணக்காய்வு மீதான தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல முக்கிய துறைகள் மீதான சட்ட ஏற்பாடுகளை வலுப்படுத்தியிருக்கிறது.

**ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்தல்**

வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பல புதிய ஒழுங்குவிதிகள்/ வழிகாட்டல்களை இலங்கை மத்திய வங்கி விடுத்தது. இதற்கமைய, வங்கித்தொழில் துறை மீது பாரிய கம்பனி கடன்பாட்டாளர்களினாலும் அதேபோன்று அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினாலும் தோற்றுவிக்கப்படுகின்ற கொடுகடன் திரட்சி இடர்நேர்வினை தணிக்கின்ற நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகளின் பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை மீது திருத்தப்பட்ட பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. திருத்தப்பட்ட பணிப்புரைகள் முன்மதியுடைய வரையறைகளைச் சுருக்குதல், சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் கடன்பாட்டாளர்களிடேயேயான இடைத்தொடர்புகளைத் தீர்மானிப்பதன் மீதான பிரமாணங்கள் வலுப்படுத்தப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இப்பின்னணியில் பாரிய கம்பனிகளும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் அவற்றின் நிதி மூலங்களை பன்முகப்படுத்துமாறும் நிதி நிலைமைக் கூற்றினை மறுசீரமைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நியதிச்சட்ட திரவத்தன்மை விகிதமாக திரவத்தன்மை உள்ளடக்கல் விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதியிடல் விகிதம் என்பனவற்றை நிர்ணயிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில்சட்ட தீர்மானங்கள் விடுக்கப்பட்ட வேளையில், நியதி திரவத்தன்மை சொத்து விகிதத்தினை பேணுவது நிறுத்தப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்கள் மீதான வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களை குறித்துரைத்தல் உள்ளிட்ட, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக ஏனைய பல ஒழுங்குகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் வங்கித்தொழில்சட்ட பணிப்புரைகளும் தீர்மானங்களும் விடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி, உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்பான தரப்பினரை குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளும் அத்தகைய தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பிலான ஒப்புதலளிக்கப்பட்ட பிணைகள் மற்றும் வரையறைகளும் விடுக்கப்பட்டன.

**சொத்து தர மீளாய்வு மற்றும் வங்கி மீள்மூலதன மயப்படுத்தல் உபாயத்தின் அபிவிருத்தி**

இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையினால் எதிர்நோக்கப்பட்ட தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் உரிமம்பெற்ற வங்கிகளின் வலுவானதும் போதுமானதுமான மூலதன மயப்படுத்தலினை உறுதிப்படுத்தும் நோக்குடன், 9 பாரிய வங்கிகளின் சொத்து தர மீளாய்வினை நிறைவுசெய்ததுடன் அத்தகைய வங்கிகளின் மறுசீரமைப்பு மற்றும் மீள்மூலதன மயப்படுத்தலுக்கான வழிகாட்டல்களையும் உருவாக்கியிருக்கிறது. மேலும், இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சுடன் இணைந்து வங்கிகளின் மீள்மூலதனமயப்படுத்தல் உபாயத்தினை உருவாக்கியது. இது, தனியார் மூலங்களிலிருந்து மூலதனப் பற்றாக்குறைகளை பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கும் ஆற்றல் வாய்ந்த வங்கிகளின் அரசமீள மூலதன மயப்படுத்தலுக்கான அளவு, நேரம், சாதனங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்நோக்கத்திற்காக 2024 வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.450 பில்லியன் ஒதுக்கப்பட்டது. எனினும், அத்தகைய நிதியினைப் பயன்படுத்தும் தேவை 2024இல் எழவில்லை. இவ்வுபாயத்தின் ஒரு பகுதியாக 9 வங்கிகள் மீள்மூலதன மயப்படுத்தும் திட்டத்தினை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்ததுடன் அத்தகைய திட்டங்களின் மதிப்பீடும் நிறைவடைந்தது. இத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்கள் தொடர்ந்தியங்கிவரும் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.

2

**நிறுவன ஆளுகையை வலுப்படுத்தல்**

தற்போதைய சந்தை அபிவிருத்திகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் மற்றும் பரிணாமமடைந்துவரும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் நிறுவன ஆளுகை செய்முறைகளையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இப்பணிப்புரைகள் முக்கியமாக பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பினையும் சுயாதீனத்தினையும் மேம்படுத்தல், பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் தகுதிவாய்ந்த தன்மையினையும் தொழில்சார் நிபுணத்துவ நேர்மையினையும் வலியுறுத்தல், சபைக் துணைக்குழுக்களின் காத்திரமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல் என்பன மீது கவனம் செலுத்துகின்ற அதேவேளையில் தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் மேற்பார்வை உள்ளிட்ட இடர்நேர்வு மேற்பார்வையினையும் பொறிமுறைக் கட்டுப்பாடுகளையும் முன்னேற்றுவதிலும் கவனம் செலுத்தின.

**உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீளெழுச்சி அலகுகளை நிறுவுதல் மற்றும் நிவாரண வழிமுறைகள்**

அசாதாரணமான பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீளெழுச்சிக்கு வசதியளிக்கும் பொருட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத் தரங்களை மேம்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி 2024 மாச்சில் வியாபார மீளெழுச்சி அலகுகளை நிறுவுதல் தொடர்பான வழிகாட்டல்களை விடுத்தது. வியாபார மீளெழுச்சி அலகுகளின் நோக்கம் அசாதாரணமான பேரண்டப் பொருளாதார சவால்களிலிருந்து தோன்றிய வருமானக்குறைப்பு, காசுப்பாய்ச்சல் அல்லது விற்பனைகள் குறைவடைந்தமை, வியாபாரத் தொழிற்பாடுகள் குறைவடைந்தமை அல்லது பாதிக்கப்பட்டமை அல்லது வியாபாரம் தற்காலிகமாக மூடப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மற்றைய விடயங்களுடன் சவால்களை எதிர்நோக்குகின்ற அல்லது சாத்தியமான நிதியியல் பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடிய உரிமம்பெற்ற வங்கிகளின் செயற்படுகின்ற, செயற்படாத கடன்பாட்டாளர்களை அடையாளம் கண்டு உதவியளிப்பதேயாகும். பராட்டே நடவடிக்கையினை இடைநிறுத்துதல் முடிவிற்கு வருவதனைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, மற்றும் அண்மைய அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகளை வழங்குவதன்மூலம் பொருளாதாரத் துறைக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்தது.

## 3. 2025இற்கும் அதற்கு அப்பாலுக்குமான கொள்கை வழிமுறைகள்

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதனையும் மற்றும் வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துகின்ற நோக்குடன் 2025இலும் அதற்கு அப்பாலும் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வங்கி மீள்மூலதன மயப்படுத்தல் உபாயத்தின் கீழ் ஒன்பது பாரிய வங்கிகளினால் தயாரிக்கப்பட்ட மீள் மூலதனமயப்படுத்தல் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் அனைத்து வங்கிகளுக்கும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக தற்போது இடம்பெற்றுவரும் மேற்பார்வையுடன் சேர்த்து அரையாண்டிற்கொருமுறை கண்காணிக்கப்படும். மேலும், நிதியியல் முறைமையானது போதுமான மூலதனத்துடன் வலுவானதும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான வங்கிகளை உள்ளடக்கியிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தைத்தூண்டல் ஒன்றிணைப்பு மீதான கட்டமைப்பொன்று நிறுவப்படவுள்ளது என்பதுடன் ஒன்றிணைப்பதற்கு ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் வசதியளிக்கப்படும். மேலும், அதிகரிக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் தீர்மானிப்பு வழிமுறைகளினூடாக நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதுடன் மத்திய வங்கி, நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தொழிற்பாடுகளை இணைப்புச்செய்து உதவுவதில் தொடர்ந்தியங்கும் அடிப்படையில் உதவும்.

மற்றைய விடயங்களுடன், பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, நிறுவன ஆளுகை, திரவத்தன்மை விகிதங்கள், தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் போன்ற துறைகளை உள்ளடக்குகின்ற விதத்தில் வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தல் 2025இல் கண்காணிக்கப்படும். மேலதிகமாக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக தற்போதுள்ள ஒழுங்குவிதிகள், சந்தை அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு இசைவாக மீளாய்வு செய்யப்படும். மேற்பார்வை கட்டமைப்பினை மேம்படுத்துவதன் மூலமும் தொடர்ச்சியான வங்கிகளின் கண்காணிப்புக்கள் மூலமும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையின் காத்திரமான தன்மை அதிகரிக்கப்பட்டு செறிவுபடுத்தப்படும். மேலும், மத்திய வங்கி, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதங்களுக்கு நிதியளித்தலை ஒழித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை மேலும் வலுப்படுத்தப்படுத்துவதற்கான அதன் நடவடிக்கைகளைத்.தொடரும்.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திற்கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக வங்கித்தொழில் துறையினை தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் சேர்த்து ஆற்றல்வாய்ந்த நிதியியல், வலுவான முன்மதியுடைய விகிதங்கள் என்பனவற்றுடன் தொழிற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.